**O.S.No.173/2016**

**Date:04.07.2018**

வாதி தரப்பு சாட்சி 1 – கருப்பணகோன் என்ற கோபால், த-பெ.பெரியசாமிக் கோன்

சாட்சி இன்று மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

குறுக்கு விசாரணை

நான் எதுவரை படித்துள்ளேன் என்றால் நான்காம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனக்கு எழுதப்படிக்கத் தெரியுமா என்றால் தெரியும். என் தாயார் பெயர் என்ன என்றால் பாப்பாத்தி ஆகும். என் தாயாரின் தகப்பனார் பெயர் என்ன என்றால் சேனாதிக் கோனார் ஆகும். தாவாச் சொத்தின் பாத்தியம் குறித்து தெரியுமா என்றால் எனக்குத் தெரியாது, என் அப்பாவைத்தான் கேட்க வேண்டும். என் உடன் பிறந்த மூத்த சகோதரர் பெயர் என்ன என்றால் ராசு ஆகும். அவர் திருமணமாகி, ஒரு மகன் இருந்தார், அவரும் இறந்து போனார், ராசுவும் இறந்து போனார். அவரது மனைவி பெயர் என்ன என்றால் சிந்தாமணி என்ற அழகம்மாள் ஆகும். அவர் உயிரோடு இருக்கிறாரா என்றால் இல்லை, இறந்து விட்டார். என் சகோதரரின் மகன் மற்றும் மனைவி இறந்து விட்டதற்கு இறப்புச் சான்றிதழ் எதுவும் உள்ளதா என்றால் இல்லை. என் சகோதரரின் மனைவி உயிரோடு இருக்கும் நிலையில், அவர் இறந்து விட்டதாக நான் பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. தாவாச் சொத்தை என் தாயார், யாரிடமிருந்து எப்போது கிரையம் பெற்றார் என்றால் எனக்குத் தெரியாது. பத்திரத்தைப் பார்த்தால்தான் சொல்ல முடியும். எவ்வளவு விஸ்தீரணம், எத்தனை கிரையப் பத்திரத்தின்படி வாங்கப்பட்டது என்றால் இரண்டு கிரையப் பத்திரங்களில் கிரயம் வாங்கப்பட்டது, விஸ்தீரணம் தெரியாது. என் தாயார் பாளையத்தான் அம்பலத்திடமிருந்து கிரையம் பெற்றார் என்றால் சரிதான். அவருக்கு வீரணன் அம்பலம், பூச்சி என்ற வீரணன் அம்பலம் என்ற இரண்டு மகன்கள் உள்ளனர் என்றால் சரிதான். நான் என் பிராதில் பாளையத்தான் அம்பலத்திற்கு இரண்டாவது மனைவி மூலமாக இரண்டு மகள்கள் இருப்பதாகச்சொல்லியுள்ள நிலையில் அவர்கள் பெயர்கள் என்ன என்றால் மூக்கம்மாள் மற்றும் ஒய்யம்மாள் ஆகும். பாளையத்தான் அம்பலத்தின் இரண்டாவது மனைவி பெயர் என்ன என்றால் அரசம்மாள் ஆகும். அரசம்மாளும், மூக்கம்மாள் மற்றும் ஒய்யம்மாள் எழுதிக் கொடுத்த சம்மத பத்திரம் என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.3 என்றால் எனக்குத் தெரியவில்லை. அரசம்மாள் மற்றும் அவரது இரண்டு மகள்களிடம் வா.சா.ஆ.3 தவிர வேறு ஆவணம் எழுதி வாங்கப்பட்டுள்ளதா என்றால் தெரியவில்லை. அரசம்மாள் மற்றும் அவரது

வாரிசுகளிடம் விடுதலையோ, வேறு பதிந்த ஆவணங்கள் எதுவும் எழுதி வாங்காததால் நான் தாக்கல் செய்துள்ள சம்மத கடிதம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. என் தாயார் இரண்டு பத்திரங்களின்படி எந்தெந்த வருடம் தாவாச் சொத்துக்களை கிரையம் வாங்கினார் என்றால் வருடம் சொல்ல முடியாது. என் தாயார் வாங்கிய கிரையப் பத்திரங்களை பார்த்தேனா என்றால் படித்துப் பார்த்தேன். அதில் உள்ள சங்கதிகளை தெரிந்து கொண்டேனா என்றர்ல சாட்சி மீண்டும் நான் படித்துப் பார்க்கவில்லை. வா.சா.ஆ.1ன் படி என் தாயார் கிரையம் வாங்கிய சொத்துக்கு தென்புறம் தான் வா.சா.ஆ.2ன் படி கிரையம் பெற்ற சொத்து அமைந்துள்ளது என்றால் தெரியாது. வா.சா.ஆ.1 கிரையப் பத்திரமானது பாளையத்தான் அம்பலம் மகன் வீரணன் அம்பலத்திடமிருந்து கிரையம் பெறப்பட்டுள்ளது என்றால் தெரியாது. வா.சா.ஆ.1 பத்திரத்தில் நான்குமாலில் தெற்கு மாலாக காட்டும் போது, கிரயம் கொடுத்த வீரணன் அம்பலம் என் கைவசம் உள்ள சொத்து என்று காண்பிக்கப்படடுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.1 நான்குமாலின் வடக்குப் பக்கம் இரணியம் கிராமம் ராசு இடம் என்று காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். என் தாயார் வா.சா.ஆ.2ன்படி கிரையம் பெற்ற சொத்து வடக்கு மாலாக தவறுதலாக வா.சா.ஆ.1 இடத்தை காண்பிக்காமல் அதற்கும் வடக்கே உள்ள இரணியம் கிராம ராசு இடம் என்று காட்டப்பட்டுள்ளது என்றால் சரியா, தவறா என்று தெரியவில்லை. என் தாயார் கிரையம் வாங்கிய இரண்டுகிரைய ஆவணங்களிலும் வடக்கே ராசு இடம் என்றும், மேற்கேயும் நடைபாதை சந்து என்றும் காண்பிக்கப்பட்டுள்ளது என்றாலும், வா.சா.ஆ.2லும் தெற்கே நடைபாதை சந்து என்று காண்பிக்கப்படடுள்ளது என்றாலும், நான் தாவா சொத்துவிபரத்தில் வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.2 கிரயப் பத்திரங்களில் கண்ட நான்குமாலில் கூறப்பட்டுள்ள நடைபாதை சந்தை மறைத்து, சொத்து விபரம் காண்பித்துள்ளேன் என்றால் சந்து உள்ளது, அது எங்களுக்குப் பாத்தியப்பட்ட சொத்து ஆகும். வா.சா.ஆ.1, 2ன்படி கிழமேல் 13, தென்வடல் 54 ½ அடிதான் எனக்குப் பாத்தியம் என்றாலும், நான் பிராது சொத்து விபரத்தில் கிழமேல் 34 ½ அடியும், தென்வடல் 13 அடியும் தவறுதலாக காட்டி வா.சா.ஆ.1 மற்றும் 2க்கு சொல்லப்பட்டுள்ள அடி அளவிற்கு மாறாக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் என் சொத்துக்கு தெற்கேயும், மேற்கேயும் உள்ள நடைபாதையை அபகரிக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் நடைபாதை சந்தை மறைத்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவாச் சொத்து கிராம நத்தம் வீட்டடி இடம் ஆகும். வா.சா.ஆ.4 ஒத்திப் பத்திரத்தில் தாவாச் சொத்து எதுவும் காண்பிக்கப்படவில்லை என்றாலும், வேறு சொத்துக்கள் காண்பிக்கப்பட்டுள்ளது

என்றாலும் சரியல்ல. வா.சா.ஆ.5 வீட்டு வரி ரசீது தாவாச்



சொத்தில் அமைந்துள்ளதாக கூறப்படும் வீட்டிற்கு செலுத்தப்பட்டதல்ல என்றால் சரியல்ல. வா.சா.ஆ.6ல் தாவாச் சொத்து காண்பிக்கப்படாததால் அது தாவாச் சொத்திற்கு சம்பந்தம் இல்லாத ஆவணம் என்றால் சரியல்ல. 1950லிருந்து 1997 வரையிலும் தாவாச் சொத்தில் வீடு இருந்து, அதை நான் அனுபவித்து வந்ததை காட்டக்கூடிய வேறு ஆவணம் உள்ளதா என்றால் 1997க்கு முன்பு அனுபவத்தைக் காட்டக்கூடிய ரசீது எதுவும் என்னிடம் இல்லை. தாவாச் சொத்தில் என்ன வீடு உள்ளது என்றால் கூரை வீடு உள்ளது. நான் தாக்கல் செய்துள்ள புகைப்படத்தில் உள்ள காரை வீடு தாவாச் சொத்தில் உள்ள வீடு இல்லை, அருகே உள்ள வீடு ஆகும். பாப்பாத்தி அம்மாளின் வாரிசு சான்றிதழ் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால தாக்கல் செய்யவில்லை. தாவாச் சொத்துக்கு மேற்குப் பக்கம் 8ம் பிரதிவாதி செல்லத்தாயி இடம் உள்ளது என்றால் சரிதான். தெற்குப் பக்கம் 1 முதல் 7 பிரதிவாதிகள் இடம் உள்ளது என்றால் சரிதான். தென்புறமும், மேல்புறமும் பிரதிவாதிகளின் இடத்திற்கும், என் இடத்திற்கும் இடையே உள்ள சந்தை தாவாச் சொத்தில் காட்டாமல் அதையும் அபகரிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள புகைப்படம் மற்றும் குறுந்தகடு தாவாச் சொத்தின் அனுபவத்தையோ, சுவாதீனத்தையோ காட்டக்கூடிய ஆவணம் இல்லை என்றால் சரியல்ல. நான் பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரையை படித்துப் பார்த்தேனா என்றால் படித்துப் பார்க்கவில்லை. தாவாச் சொத்தின் உரிமையை பிரதிவாதிகள் மறுக்கும் நிலையில், தாவாச் சொத்து எனக்குப் பாத்தியம் என்று ஏன் வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் அதற்குத்தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். பிரதிவாதிகள் எதிர் வழக்குரை தாக்கல் செய்த பின்னரும், உரிமை மூலத்தை மறுத்த பின்னரும் விளம்புகை கோரி பிராதை திருத்தாத காரணத்தினால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. உண்மையிலேயே நடைபாதை உள்ளதா என்பதையும், நான் கூறும் அடி அளவுகள் சரி பார்ப்பதற்கும் ஆணையர் நியமனம் செய்யலாமா என்றால் செய்யலாம். அவ்வாறு செய்யாததாலும் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.